Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

22.04.2020 புதன்கிழமை






## கொரோனா 321

பேருவளையைச் சேர்ந்த 11 பேர் இன்று அடையாளம்

கொழும்பு, ஏப்ரல் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய மேலும் 11 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் களுத்துறை மாவட்டம், பேருவளையைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதார அமைச்சு

பக்.2

# கொழும்பிலிருந்து 1000 பேர் தனிமைப்படுத்தலுக்காக வடக்கில்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

கொழும்பில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தை, மருதானை, ஹசல்வத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் பாகிஸ்தானிலிருந்து நாடு திரும்பிய மாணவர்கள் உள்ளடங்கலாக சுமார் ஆயிரத்து 100 பேர் வடக்கிலுள்ள தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பக்.2



## வடக்குக்கு அழைத்து வரப்பட்டமை தெரியாது

சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து வரப்பட்டவர்கள் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு எதுவும் தெரியாது என்று,

பக்.2

## 104 பேர் குணமடைவு 199 பேர் சிகிச்சையில்

காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் 32 பேர்

கொழும்பு, ஏப். 22

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய மேலும் இருவர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு

பக்.2

கொரோனா தடுப்புக்காக

## இந்திய இராணுவம் வராது!

இந்தியத் தூதரகம் தெளிவுபடுத்தல்

கொழும்பு, ஏப். 22

கொரோனா தடுப்புக்காக இலங்கை, பங்களாதேஷ், பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு தமது அணிகளை அனுப்பி உதவ இந்திய இராணுவம் தயாராகி வருவதாக வெளிவந்த செய்திகள் பொய்யானவை என்று இந்தியத் தூதர

பக்.2



## வடக்கில் தனிமைப்படுத்தல் மையங்கள் இன்னும் உருவாகும்

இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் மையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பக்.2

## விபத்தில் ஒருவர் சாவு

கிளிநொச்சி, ஏப். 22

கிளிநொச்சி வின்சன் வீதி 3ஆம் கட்டை திருவையாறு பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வேலியின் தூணோடு மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார். குறித்த விபத்து இன்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

பக்.2



## தனிமைப்படுத்தப்பட்ட 4,348 பேர் வீடுகளுக்கு!

கொழும்பு, ஏப். 22

முப்படையினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இதுவரையில் 4 ஆயிரத்து 348 பேர் தங்களது வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று இராணுவத் தளபதியும் கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பக்.2

கொழும்பில்

## தனிமைப்படுத்தலில் தப்பித்தவர் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

தொடர் கொரோனா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து தனிமைப்படுத்தல் பகுதியாக அறிவிக்கப்பட்ட கொழும்பு 12 இலிருந்து தப்பித்த நபர் ஒருவர், யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தொல்புரம் பகுதியில் இன்று மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். அவரை உடனடியாக

பக்.2

## முல்லையில் 10 ஏக்கர் வெள்ளியன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்பாகவுள்ள 10 ஏக்கர் காணியிலிருந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை படையினர் முழுமையாக வெளியேறவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றி மாவட்டச் செயல

பக்.2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# கொழும்பிலிருந்து 1000 பேர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பலாலி, கொடிகாமம், கிளிநொச்சியில் இரணைமடு, இயக்கச்சி, வவுனியாவில் பம்பைமடு, முல்லைத்தீவில் கேப்பாபிலவு ஆகிய தனிமைப்படுத்தல் மையங்களை இன்று காலை இவர்கள் வந்தடைந்தனர்.
கொழும்பு மாவட்டத்தில் கொரோனா நோய்த் தொற்று சமூகப் பரம்பலாக அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் வசித்து வரும் மக்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
இதேவேளை பாகிஸ்தானில் தங்கியிருந்த இலங்கை மாணவர்கள் நேற்று அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
வடக்கில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் பலாலியில் உள்ள விமானப் படையினரின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் 99 பேரும், கொடிகாமத்தில் 350 பேரும், கேப்பாபிலவில் 120 பேரும், இரணைமடுவில் 200 பேரும், இயக்கச்சியில் 170 பேரும், பம்பைமடுவில் 100 பேருமாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ,5,22,26,105)



# வடக்குக்கு அழைத்து...

சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்திலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு நேற்று இரவு ஆயிரத்துக்கும் அதிகமானோர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.
இது தொடர்பில் இராணுவத் தளபதியிடம் கேட்டபோது, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் மற்றும் அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் விவரங்களைக் கேட்குமாறு கூறினார்.
இது தொடர்பில் மாவட்டச் செயலர்களிடமோ, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினரிடமோ அது தொடர்பான விவரங்கள் இல்லை என்று அவர்கள் பதிலளித்தனர்.
'இராணுவ முகாமில் மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் தொடர்பான விவரங்கள் எங்களுக்குத் தெரிவிக்கப்படமாட்டாது' என்று சுகாதாரப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஒ,5,22)

# கொரோனா 321

அறிவித்துள்ளது.
பேருவளையில் 30 இற்கும் மேற்பட்டோர் ஏற்கனவே கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதையடுத்து அங்கிருந்து தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தங்கவைக்கப்பட்டவர்களில் 11 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின்போது தொற்றுக்கு இலக்காகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை 310 இலிருந்து 321 ஆக அதிகரித்துள்ளது எனச் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ,5,22)



# வடக்கில் தனிமைப்படுத்தல் மையங்கள்...

வெளிநாடுகளிலிருந்து வரும் மாணவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களில் வைத்துக் கண்காணிக்க வேண்டியுள்ளது. மேலும் நாட்டில் எங்காவது ஓரிடத்தில் கொரோனா நோயாளி அடையாளப்படுத்தப்பட்டால் அந்தப் பகுதியிலுள்ளவர்களை உடனடியாக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதன் காரணமாக வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது, என்றார். (ஒ,5,22)

## 104 பேர் குணமடைவு...

அறிவித்துள்ளது. அதற்கமைய இது வரை 104 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர். தொற்றுடன் அடையாளம் 321 பேரில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தநிலையில், 199 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
அவர்களில் 93 பேர் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையிலும், 20 பேர் முல்லேரியா மருத்துவமனையிலும், 36 பேர் வெலிக்கந்தை ஆதார மருத்துவமனையிலும், 18 பேர் சிலாபம் இரணவில மருத்துவமனையிலும், 32 பேர் காத்தான்குடி ஆதார மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
மேலும், 148 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவமனைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ,5,22)

## தனிமைப்படுத்தப்பட்ட 4,348 பேர்....

அவர் மேலும் தெரிவித்தாவது, முப்படையினரால் நிர்வகிக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து பரிசோதனைகளின் பின்னர் 149 க்கும் அதிகமான நபர்கள் நேற்று தங்களது வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.
தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இதுவரையில் 4 ஆயிரத்து 348 பேர் தங்களது வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.
கொரோனாத் தொற்றிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் வகையில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் செயற்படுகின்றன -என்றார். (ஒ,5,22)

## தனிமைப்படுத்தலில் தப்பித்தவர்...

தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை ஏற்றி வரும் பாரவூர்தியிலேயே அவர் மறைந்து தப்பித்து வந்துள்ளதாக முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஒ,5)





## விபத்தில் ஒருவர்...

அதே இடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய சுந்தரம் மகேந்திரம் என்பவரே உயிரிழந்தவராவார். இறப்புத் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (ம214)

# இந்திய இராணுவம்...

கம் தெரிவித்துள்ளது.
'கொரோனா வைரஸ் பரவலைக் கையாள்வதற்கான திறன்களை அதிகரிக்க அந்த நாடுகளுக்கு உதவுவதற்கு இந்திய இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.
கொரோனா வைரஸ் பரிசோதனை ஆய்வகங்களை அமைக்கவும், உள்ளூர் மருத்துவ நிபுணர்களுக்கு தொற்றுநோயை எதிர்த்துப் போராடவும் உதவுவதற்காக 14 பேர் கொண்ட இந்திய இராணுவக் குழு கடந்த மாதம் மாலைதீவுக்கு அனுப்பப்பட்டது.
அத்துடன், இந்த மாத ஆரம்பத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்தியா 15 பேர் கொண்ட இராணுவக் குழுவை குவைத்துக்கு அனுப்பியது. இந்நிலையிலேயே, தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு பிராந்தியத்தில் உள்ள அனைத்து நட்பு நாடுகளுக்கும் உதவி வழங்குவதற்கான இந்தியாவின் கொள்கையின் ஒரு பகுதியாக இலங்கை, பங்களாதேஷ், பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கான அணிகள் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.
இந்தச் செய்திகளையே இந்தியத் தூதரகம் முற்றாக மறுத்துள்ளது. (ஒ,5)

# முல்லையில் 10 ஏக்கர் வெள்ளியன்று....

ருக்கு படையினர் அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அலுவலகம் முன்பாகவுள்ள மக்களுக்குச் சொந்தமான நிலத்தை கடந்த 11 ஆண்டுகளாக படையினர் ஆக்கிரமித்துள்ளனர். அந்த நிலங்களை மீள ஒப்படைக்குமாறுகோரி அவற்றின் உரிமையாளர்கள் நீண்டகாலமாகப் போராட்டம் நடத்தி வந்தனர்.
இந்த நிலையில் குறித்த நிலங்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் வகையில் நாளை மறுதினம் மாவட்டச் செயலரிடம் காணி விடுவிக்கப்பட்டு, அதற்கான பத்திரம் ஒப்படைக்கப்படும் என்றும் மாவட்டச் செயலகத்துக்கு படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டின் உரிமையாளர் உயிரிழந்தவேளை அவருடைய வீட்டில் உடலை வைக்க அனுமதி கோரியபோதும் மறுக்கப்பட்ட நிலையில் முகாமின் முன்பாக சடலத்தை வைத்திருந்துவிட்டு பின்னர் எடுத்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (த-105)

# மைத்திரிக்கு எதிராக விசாரணை அவசியம்

## வலியுறுத்துகிறார் காவிந்த ஜயவர்தன

கொழும்பு, ஏப். 22
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தற்போதைய அரசு முன்னெடுத்துவரும் விசாரணைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட விசாரணை தொடர்பில் எனக்கு முழுமையான திருப்தியில்லை.
தாக்குதல் சம்பவத்தின் பின்னர், ஜனாதிபதி, பிரதமர், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் உட்பட மேலும் பல தரப்புகளுக்கு நாம் கடிதமொன்றைக் கையளித்தோம். எவ்வாறான விடயங்கள் விசாரணைகளில் இடம்பெறவேண்டும் என பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அவை எதுவும் அன்றும், இன்றும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
நீர்கொழும்பில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் அகதிகள் வாழ்கின்றனர். யூ.என்.எச்.ஆர்.சி. ஊடாகவே வந்துள்ளனர். இவர்கள் தொடர்பான தரவுகள் அரசிடம் இல்லை என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன்.
இவர்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் பாதுகாப்பு குறித்து வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரியிருந்தோம். அத்துடன், மத்ரஸா பாடசாலைகள் கல்வி அமைச்சின் கண்காணிப்புக்குள் வரவேண்டும், ஷரியா பல்கலைக்கழகம் அரசுடமையாக்கப்படவேண்டும் எனவும் கோரியிருந்தோம். இவையும் நடப்பதாக தெரியவில்லை. தகுதி தராதரம் பாராது குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்றார். (ஒ,5,44)



## கொரோனா தொற்று

# பேலியகொட மீன் சந்தையில் 500 பேருக்குப் பரிசோதனை!

கொழும்பு, ஏப். 22
பேலியகொட மீன் வர்த்தக மத்திய நிலைய மீன் வியாபாரிகள், அங்கு பணிபுரியும் பணியாளர்கள் உள்ளிட்ட 500 பேரை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய, இவர்களுக்கு குறித்த பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பேலியகொட மீன் சந்தைப் பகுதியில் மீன்களைப் பெற்றுக் கொண்ட பிலியந்தலையைச் சேர்ந்த மீன் வியாபாரி ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதையடுத்து, இந்தப் பரிசோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22,114)

# நிலைமை மிக மோசம்! தேர்தல் முக்கியமல்ல!!


## மஹிந்த 'பல்டி'

கொழும்பு, ஏப். 22
"கொரோனா வைரஸால் இலங்கையின் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ள நிலையில், எமக்கு நாடாளுமன்றத் தேர்தல் முக்கியமல்ல. கொரோனாவை இல்லாதொழிப்பதே எமது பிரதான நோக்கம்."
என்று தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.
நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையின் நிலைமை மிக மோசமடைந்துள்ளது. உயிரிழப்புகள் 7 மட்டும்தான் பதிவாகியுள்ளன. ஆனால், கொரோனாவால் பாதிப்படைவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.
இந்தக் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சுகாதாரப் பிரிவினர், மருத்துவத்துறையினர், முப்படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் முழுமூச்சுடன் போராடி வருகின்றனர். இந்தநிலையில், எமக்கு நாடாளுமன்றத் தேர்தல் முக்கியமல்ல. கொரோனாவை இல்லாதொழிப்பதே எமது பிரதான நோக்கம்.
எனினும், வெகுவிரைவில் நிலைமை சரி வந்தால் ஜூன் மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடக்கக்கூடும். நாம் எந்த வேளையிலும் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். அதில் வெற்றி பெறுவதிலும் உறுதியாக இருக்கின்றோம்.
நாட்டின் அரசமைப்பை மதித்து திகதி குறிப்பிட்டு தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு ஒத்தி வைத்துள்ளது. அது பாராட்டத்தக்கது" என்றார். (த-22)

## தபால்மூல வாக்காளர்கள்

# மே 4 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

கொழும்பு, ஏப். 22
நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள வாக்காளர்கள் தங்கள் விண்ணப்பங்களை மே மாதம் 4ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ மாவட்டத் தேர்தல்கள் திணைக்களங்களுக்குச் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெற இருப்பதால் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள வாக்காளர்கள் தங்கள் விண்ணப்பங்களை மே மாதம் 4ஆம் திகதியோ அதற்கு முன்னரோ மாவட்டத் தேர்தல்கள் திணைக்களங்களில் சமர்ப்பிக்கவேண்டும். ஏற்கனவே தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்ட இறுதித் தினமான கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருந்தது. குறித்த திகதிக்குப் பதிலாக தற்போது மே மாதம் 4ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. மே 4ஆம் திகதிக்கோ அதற்கு முன்னரோ தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் விண்ணப்பங்களை தங்கள் மாவட்டத் தேர்தல்கள் பணிமனைகளில் கையளிக்கவேண்டும்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக அந்தத் திகதியில் தேர்தலை நடத்த முடியாது என்று தெரிவித்து தேர்தல் பிற்போடப்பட்டிருந்தது. எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)



## கட்டுநாயக்கவில் பணியாற்றிய

# பெண் மூலமாக கொரொனா!

கொழும்பு, ஏப். 22
இரத்தினபுரி மாவட்டம், வரக்காபொலவில் நேற்று இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றும் கொரோனா தொற்றுக்குள்ளான பெண் தங்கியிருந்த வீட்டைச் சேர்ந்தவர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
இதையடுத்து வரக்காபொல தொற்றாளர் நேற்றிரவு கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணியாற்றிய குறித்த பெண் தங்கியிருந்த வீட்டில் இருந்தோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே, குறித்த நபர் நேற்று பி.சி.ஆர். பரிசோதனையின் போது தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். அந்த வீட்டைச் சேர்ந்த மேலும் இருவர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார். (த-22)

# கொரோனாத் தொற்றுடன் சிகை அலங்கரிப்பாளர்

## பலருக்குப் பரவியிருக்கலாம் என்று அச்சம்

கொழும்பு, ஏப். 22
கொழும்பு 12, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரநாயக்க மாவத்தையில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட சிகை அலங்கரிப்பாளர் கொரோனா தொற்றியிருந்தவேளை சுமார் 25 பேருக்கு தனது சேவையை வழங்கியுள்ளதால் அந்தப் பகுதியில் பலருக்குத் தொற்றுப் பரவியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.
அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்கப் பாதுகாப்புத் தரப்பும் சுகாதார அமைச்சும் தயாராகியுள்ளன. (ஒ,5,22)

# பொது இடத்தில் எச்சில் துப்பினால் நடவடிக்கை

வவுனியா,ஏப்.22

வவுனியா நகரில் பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நகருக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் மற்றும் பஸ்களில் பயணம் செய்து கொண்டு யன்னல் வழியாக எச்சில் துப்புபவர்கள் மீது கவனம் செலுத்தவுள்ளோம். இவ்வாறான செயற்பாடுகளாலும் கொரோனோ வைரஸ் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. எனவே அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆராய்ந்து வருகின்றோம் - என்றார். (க-110)

# கொரோனாவை எதிர்க்க இலங்கைக்கு 230 மில். ரூபா



கொழும்பு, ஏப்.22

இலங்கையில் கொவிட் 19 தொற்றுப் பரவலைக் கட்டுப் படுத்துவதற்காக ஜப்பானிய அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறை சம்மேளனம் ஆகியவற்றினூடாக சுமார் 230 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துக்கு 5 லட்டம் அமெரிக்க டொலரும், புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவனத்துக்கு 4 லட்சத்து 22 ஆயிரத்து 500 அமெரிக்க டொலரும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை சம்மேளனம் ஊடாக 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலரும் வழங்கப் பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்காக, இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சுகாதார மற்றும் மருத்துவப் பராமரிப்பு திறன்களைக் கட்டியெழுப்புவதற்காக இந்த மூன்று சர்வதேச அமைப்புகளினூடாக இந்த நிதி உதவியை வழங்குவதற்கான அனுமதியை ஜப்பானிய அரசு மார்ச் 10 ஆம் திகதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)



# மின் கம்பத்துடன் மோதி மோ. சைக்கிள் விபத்து!

*ஒருவர் உயிரிழப்பு*

மட்டக்களப்பு, ஏப்.22

வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காயான்கேணி புல்லாவி சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இறாலோடையில் இருந்து வாகரை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் புல்லாவிச் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளின் பின் பக்கமாக இருந்து வந்த இறாலோடை காயான்கேணியை சேர்ந்த தியாகராஜா கஜுஜன் (வயது 18) என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இறாலோடை காயான்கேணியைச் சேர்ந்த செல்வந்திரன் கேதுஜன் (வயது 19) என்பவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப் பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# இந்தியாவிலிருந்து 101 மாணவர்கள் நாடு திரும்புவர்

கொழும்பு, ஏப்.22

இந்தியாவில் தங்கியுள்ள 101 மாணவர்களை, இலங்கைக்கு நாளை அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அமிரிட்சர் நகரத்தில் தங்கியுள்ள மாணவர்களே யூ.எல்.146 இலக்க விமானத்தில் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானில் சிக்கியிருந்த 113 இலங்கை மாணவர்கள் நேற்று மாலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். லாகூர் நகரில் இருந்து 93 பேரும், கராச்சி நகரில் இருந்து 20 பேரும் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் புனானை மற்றும் வெருகல் தடுப்பு நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை கோயம்புத்தூர் நகரில் இருந்து 117 பேரும், நேபாளத்தின் காத்மண்டு நகரில் இருந்து 93 பேரும் எதிர்வரும் 24 ஆம் திகதி நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளனர். (க)

# தனியார் வைத்தியசாலையை மூடி ஊழியரைத் தனிமைப்படுத்த முடிவு

கொழும்பு, ஏப்.22

பன்னிப்பிட்டியவில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றை தற்காலிகமாக மூடி அங்கு பணிபுரிந்த ஊழியர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பொரலஸ்கமுவ பகுதியில் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒருவர் மேற்குறித்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளமை தெரியவந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலையின் 73 ஊழியர்கள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்பட்டதுடன் அவர்களில் ஏழு பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பிலியந்தலை பகுதியில் கொவிட் 19 தொற்றாளருடன் நெருங்கிப் பழகியவர்கள் மற்றும் சுற்றியுள்ள வீடுகளில் வசிப்பவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கொட்டாவ சுகாதார பணிப்பாளர் இந்திக எல்லவல தெரிவித்தார். அதேபோல் கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தையில் வசிப்பவர்களும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று கொழும்பு தலைமை சுகாதார பணிப்பாளர் டொக்டர் டபிள்யு.கே.சந்திரபால தெரிவித்தார். (ப)

# எரிபொருள் விலையை குறைக்குமாறு கோரிக்கை



கொழும்பு, ஏப்.22

அத்தியாவசிய சேவை மற்றும் பயணிகள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டிகளுக்காக, எரிபொருள் விலையைக் குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை சுய தொழிலாளர்களின் தேசிய முச்சக்கர வண்டிச் சங்கம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் அபாயம் காரணமாகப் பெற்றுக் கொடுக்கப்படும் உதவித் தொகை தமது சங்கத்தின் பெரும்பாலானவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அதன் தலைவர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.(க)



## மன்னாரில் இலவசமாக வழங்கப்பட்டது மாஸ்க்

மன்னார், ஏப்.22

மருத்துவ ஆலோசனைக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட முகக் கவசங்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் இலவசமாக வழங்கப்படுகின்றது.

கொரோனாத் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக நடமாடுவதற்கு முகக் கவசங்கள் கட்டாயமானது என்று சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நிவாரணப் பணிகளோடு மக்களுக்கான முகக் கவசங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

ஏற்கனவே இந்த 1000 முகக் கவசங்கள் இவ்வாறு வழங்கப்பட்ட நிலையில், மன்னார் நகர எல்லைப் பகுதியில் இக்கட்டான இந்தச் சூழ்நிலையிலும் சுத்திகரிப்பு மற்றும் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சுத்திகரிப்பு பணியாளர்களுக்கான முகக்கவசங்கள் மன்னார் நகர சபைச் செயலாளரிடம் நேற்றையதினம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் திலிபன் அவற்றை வழங்கினார்.(ப-213)

## ஆத்ம சாந்தி வேண்டி விசேட பூசை வழிபாடு

மட்டக்களப்பு, ஏப்.22




கடந்த வருடம் இடம் பெற்ற பயங்கரவாதக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவி மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி மட்டக்களப்பில் நேற்றுச் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனால் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற வழிபாட்டில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

## வாடகை வாகனங்களில் இருவரே பயணிக்கலாம்

கொழும்பு, ஏப்.22

வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் சாரதியுடன் இரு பயணிகள் மாத்திரமே பயணிக்க முடியும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். பொதுப் பயணிகள் போக்குவரத்தின் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளப்படாத சில சந்தர்ப்பங்களும் உள்ளன. இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (க)



# கொரோனாவை வெல்வதே இலக்கு!

கொழும்பு, ஏப்.22

கொவிட் 19 வைரஸ் பரவல் அச்சுறுத்தலை வெகுவிரைவில் வெற்றி கொள்வதே அரசின் இலக்கு என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

"தற்போதும் கொரோனா நோயாளர்களை அடையாளம் கண்டு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து விஞ்ஞான ரீதியான செயற்பாடுகளும் எடுக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையிலும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காணப்படுவதால் மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம்" என அவர் தெரிவித்துள்ளார். (ப)

## குண்டுத் தாக்குதல்களில் இறந்தோருக்கு அஞ்சலி

மன்னார், ஏப்.22

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த உறவுகளுக்கு மன்னார் நானாட்டானில் அஞ்சலி செலுத்தப்பட்டது. நானாட்டான் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட சுற்று வட்டத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று இரவு 7 மணியளவில் நடைபெற்றன.

அஞ்சலிச் சுடரை நானாட்டான் ஆரோக்கிய மாதா ஆலய பங்குத் தந்தை மற்றும் நானாட்டான் சிறி செல்வமுத்து மாரியம்மன் ஆலய பிரதம குருக்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். கடந்த வருடம் இதே தினத்தில் தேவாலயங்கள் மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது ஆராதனைகளில் ஈடுபட்டிருந்த குழந்தைகள் பெண்கள் உட்பட பல பொது மக்கள் உயிரிழந்திருந்தனர். அந்த துன்பியல் சம்பவத்தின் ஒரு வருட பூர்த்தியை நினைவு கூறும் முகமாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-213)





## கசிப்பு மீட்பு கைதானவர் தப்பியோட்டம்

கொழும்பு, ஏப். 22

பதுளை எல்ல பகுதியைச் சேர்ந்த கினலன் பெருந்தோட்டத்தில் இன்று காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கசிப்புத் தயாரிப்பு மற்றும் விற்பனை செய்யும் இடத்தை எல்ல பொலிஸார் முற்றுகையிட்டனர். கசிப்பு தயாரிப்புச் செய்யும் இடத்திலிருந்து 22 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கொண்ட கசிப்பு தயாரிக்கும் கோடா மற்றும் பெருமளவிலான உபகரணங்கள், விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த 30 போத்தல் கசிப்பு ஆகியன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்த போதும், அவர்களில் ஒரு இளைஞர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். அந்த இளைஞனைப் பொலிஸார் தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின்னர், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட காலமாக அந்த இடத்தில் கசிப்பு தயாரிப்பும், விற்பனையும் இடம்பெற்று வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இது தொடர்பாகப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

## மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

மன்னார், ஏப்.22

கொரோனா அச்சம் காரணமாகத் தற்காலிகமாகச் சேவையை இடைநிறுத்தியிருந்த மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உபகாரியாலயத்தின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கட்டான சூழ்நிலைகளில் மக்களுடைய மனித உரிமை மீறல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த உபகாரியாலயம் தமதுச் சேவையை ஆரம்பித்துள்ளது. அதேவேளை உபகாரியாலயத்துக்கு முறைப்பாடு செய்ய வரும் மக்கள் அதிகளவானோரை அழைத்து வருவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் முறைப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் மாத்திரமே வர வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை காரியாலயத்துக்கு வருபவர்கள் அரசாங்கத்தினுடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றி சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து முகக்கவசங்கள் அணிந்து வருவது கட்டாயம் எனவும், இயலுமானவரை 023 312 3906 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அழைத்து தங்களுடைய முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் என்றும் மன்னார் மாவட்ட உப காரியாலயத்தின் பொறுப்பதிகாரி சட்டத்தரணி வசந்த ராஜா தெரிவித்தார். (ப-213)

# தேர்தலுக்கு நாள் குறித்தமைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம்

கொழும்பு, ஏப்.22

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் தேர்தல் திகதியை நிர்ணயித்தமை குறித்துக் கண்டனம் வெளியிட்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட இறுதி நோயாளரும் குணமடைந்து விட்டமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

இதுகுறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவினால் இன்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியிலும் அரசாங்கம் தேர்தல் கனவிலேயே இருந்தது. தேர்தலை விடவும் மக்களின் உயிரே முக்கியமானது என்பதே எப்போதும் எமது நிலைப்பாடாகும். அந்தவகையில் ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்பாக தேர்தலை நடத்தக்கூடாது என்று நாங்கள் முன்வைத்த கோரிக்கையை செவிமடுத்தமைக்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட இறுதி நோயாளரும் குணமடைந்து விட்டமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்பட வேண்டும். தேர்தலுக்கு முன்னர் பரப்புரை நடவடிக்கைகளுக்காக வேட்பாளர்களுக்குக் குறைந்தபட்சம் 5 வார காலத்தையேனும் வழங்குவது அவசியமாகும். அவ்வாறிருக்க இந்த அசாதாரண சூழ்நிலையில் தேர்தல் திகதியை நிர்ணயித்தமை குறித்து எமது கண்டனத்தை வெளிப்படுத்துகிறோம் - என்றுள்ளது. (ப)

# பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தல் நடக்கும்

## முன்னாள் எம்.பி செஹான் சேமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

கொரோனா வைரஸ் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததைத் தொடர்ந்து மிகவும் பாதுகாப்பான முறையில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கான பலமான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும். கடந்த அரசாங்கத்தில் பலவீனமான நாடாளுமன்றம் காணப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாடுகள் அரச செயலொழுங்கினையும் பலவீனப்படுத்தியது. ஏப்ரல் 21 ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதல் இடம்பெறாமல் இருப்பதற்கு இரு அரச தலைவர்களும் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இவ்வாறான பலவீனமான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெறக்கூடாது என்பதற்காகவே பெரும்பாலான மக்கள் ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்- என்றார். (ப)

# கொரோனா நெருக்கடி குறித்து இந்திய பதில் தூதரோடு தினேஸ் சந்திப்பு

கொழும்பு, ஏப்.22

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி குறித்து இலங்கைக்கான இந்தியப் பதில் தூதுவர் வினோத் கே.ஜேகப் மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குண வர்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து பதில் தூதுவர் தெளிவுபடுத்தினார். அதேபோன்று இந்த உலகளாவிய தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் எடுத்துக்கூறினார். இதுவிடயத்தில் தற்போது இருநாடுகளும் ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் செயலாற்றிவருவது குறித்து அவர்கள் திருப்தி வெளியிட்டனர்.

அத்தோடு தொற்றுநோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் அனைவரும் ஒன்றிணைந்து பொறிமுறையொன்றை வகுப்பது மிகவும் அவசியமாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இச்சந்திப்பின்போது இருநாடுகளும் ஒன்றிணைந்து கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்தில் ஈடுபடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (ப)

# கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு திரிபோஷா பைக்கற்றுக்கள்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷா பைக்கற்றுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இவற்றை அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்க குடும்ப மருத்துவ அதிகாரிகளை ஈடுபடுத்தவுள்ளோம் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.எம். பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கொவிட் 19 வைரஸ் பரவலின் காரணமாக ஆரோக்கியமான சுகாதார பாதுகாப்புக்கு மத்தியில் சுகாதார சேவையை வழங்குவதற்கான அனைத்து விதமான முயற்சிகளையும் சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது என்று தெரிவித்தார். (து)

# இரத்த வங்கியில் குவித்த இளைஞர்கள்

வவுனியா, ஏப்.22

இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை இரத்த வங்கியில் இன்று இரத்ததானம் வழங்குவதற்குக் குவிந்தனர்.

மக்கள் மத்தியில் இரத்த தானம் செய்தல் தொடர்பில் விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுவதால், நாடளாவிய ரீதியில் இரத்த வங்கிகளில் குருதித் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் எதிர்வரும் 2 தினங்களில் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியில் காணப்படும் இரத்தங்கள் முடிவடையவுள்ளமையால், அவசரமாகக் குருதியை வழங்குமாறு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து வவுனியா வைத்தியசாலையில் இரத்த தானம் செய்வதற்கு இளைஞர்கள் ஆர்வத்துடன் வருகை தந்தனர்.

ஓ,ஏ,பி போன்ற எதிர்மறை இரத்த வகைகளுக்குக் கூடுதல் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்கு பொது மக்கள் முன்வர வேண்டும் என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-18)



# மருத்துவ சங்க அறிவுரையை உதாசீனம் செய்வது ஆபத்து!

## தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும், ஏப். 22

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அபாயம் வழமைக்குத் திரும்பவில்லை. பலர் பரிசோதனை செய்யப்படாத நிலையில் சிலர் மறைந்தும் உள்ளனர் என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலையில், மருத்துவ சங்கத்தின் அறிவுரையை மீறி ஊரடங்கைத் தளர்த்துவது மிகப்பெரும் ஆபத்தானது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டவுடன் மக்கள் அலை அலையாக தங்கள் தேவைகளை நிறைவேற்ற வெளியில் வருவது தவிர்க்க முடியாதது. இதனைக் கருத்திற்கொண்டு மருத்துவ சங்கம் அரசுக்கு ஊரடங்கை நீக்கவேண்டாம் என்று ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு அதை உதாசீனம் செய்து வேறு காரணங்களுக்காக ஊரடங்கை நீக்கியிருப்பதை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. வரப்போகும் ஆபத்தைச் சந்திக்கும் ஆற்றல் மருத்துவத்துறைக்கு மட்டுமே உள்ளது. ஆகையால் நாட்டு மக்களையும், மதிப்பு மிக்க மருத்துவர்களையும், அந்தத் துறைசார்ந்த ஊழியர்களையும் கருத்திற்கொண்டு மருத்துவ சங்கத்தின் ஆலோசனைக்கு மதிப்பளிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது- என்றுள்ளது. (து)

# குண்டுத் தாக்குதலுக்கு உதவியோரை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

## கரு ஜயசூரிய வலியுறுத்து

கொழும்பு, ஏப்.22

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புடையோருக்கு உதவியவர்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அனைவரையும் இந்த அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தினார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்தாவது:

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று ஒரு வருடம் கடந்திருக்கும் நிலையில், அத்தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்காகப் பிரார்த்திப்போம். அதில் காயமடைந்தவர்களுடனான எமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவோம். ஒரே நாட்டவர் என்ற வகையில் நாமனைவரும் ஒருமித்து நின்று இலங்கையில் தீவிரவாதத்துக்கு ஒருபோதும் இடமில்லை என்பதைப் பறைசாற்றுவோம்.

அத்தாக்குதல்களுடன் தொடர்புடையோருக்கு உதவியளித்தவர்கள், பொறுப்புக்கூற வேண்டிய அனைவரையும் இந்த அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ப)

# நல்லாட்சி அரசும் பொறுப்பு கூறவேண்டும்

## அருந்திக பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

ஈஸ்டர் தினத் தாக்குதலுக்கு நல்லாட்சி அரசின் இரு அரச தலைவர்களும்,பாதுகாப்புப் பிரிவின் முக்கிய தரப்பினரும் பொறுப்புக்கூற வேண்டும். நாட்டில் இனி அடிப்படைவாத தீவிரவாதச் செயற்பாடுகள் தோற்றம் பெறாதளவுக்கு தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல் இடம்பெற்று நேற்று ஒரு வருடமாகியுள்ளது. தாக்குதல் தொடர்பில் நல்லாட்சி அரசுக்கு முற்கூட்டியே அனைத்து தகவல்களும் தொடர்ந்து கிடைக்கப்பெற்றன. ஆனால் அரச தலைவர்களின் தனிப்பட்ட முரண்பாடு களால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. நல்லாட்சி அரசின் கவனவீனத்தால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 500க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதற்கு நல்லாட்சி அரசின் இரு அரச தலைவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்- என்றார். (த)

# ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் சுயகட்டுப்பாடு தேவை

கொழும்பு, ஏப்.22

நாட்டில் ஊரடங்கு தளர்த்தப் பட்டாலும் மக்கள் சுயகட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்று முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

கடந்த திங்கட்கிழமையிலிருந்து நான்கு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. எனினும் மக்கள் கொரோனா தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சுகாதார பிரிவினரால் விடுக்கப்படும் வேண்டுகோள்களை கடைபிடித்து தேவையற்ற விதத்தில் வீதிகளில் நடமாடாது வீடுகளில் தனித்திருப்பது பொருத்தமான செயலாகும். அத்தியாவசிய பொருள்களை வாங்கச் செல்லும் போதும் சமூக இடைவெளியைப் பின்பற்றி சுய கட்டுப்பாட்டுடன் செயற்படுவதன் மூலமே மக்கள் கொரோனாத் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்- என்றுள்ளது. (ஐ)

# கொல்லப்பட்டவர்களுக்கு பருத்தித்துறையில் அஞ்சலி

பருத்தித்துறை, ஏப்.22

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று பருத்தித்துறை கட்டைவேலி இலங்கை மெதடிஸ்த திருச்சபையில் நடைபெற்றது.

நிகழ்வில் அருட்பணி.ஜே.றிச்சட், அருட்பணி.ஏ.கிருபாகரன், அருட்சகோ.எம்.சுதாகரன், அருட்சகோ ஆர்.ஜோய் பாலசுப்பிரமணியம், அருட்சகோ.பி.விஜேயகுமாரி மற்றும்

பருத்தித்துறை பள்ளிவாசல் உதவி மௌலவி மொகமட் நலீர், பருத்தித்துறை பொலிஸ் உத்தியேகத்தர்கள் எஸ்.மதுஷான், கே.குமாரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-26)



# ஊரடங்கு வேளையில் மாட்டை திருடியோர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 22

ஊரடங்கு நடைமுறையிலிருந்த வேளை, காரைநகர் களபூமியில் காளை மாட்டைப் பட்டப்பகலில் களவாடி சிவகாமி அம்மன் ஆலயத்தடியில் வைத்து வெட்டி இறைச்சியாக்கி விற்பனை செய்தனர் என்று கூறப்படும் நபர்களை அந்தப் பகுதி இளைஞர்கள் பொலிஸாருடன் இணைந்து மடக்கிப் பிடித்தனர்.

3 ஆண்கள் ஒடித்தப்பிய நிலையில் 3 பெண்களை பொலிஸார் கைது செய்தனர். சமுர்த்தி அலுவலரின் 40 ஆயிரம் பெறுமதியான காளை மாடு கடந்த 19 ஆம் திகதி திருடப்பட்டுள்ளது. அதை உரிமையாளர்கள் தேடிய நிலையில், மறுநாள் கோவிலடியில் வைத்து வெட்டப்பட்டுள்ளது. அதன்போது அந்தப் பகுதியை இளைஞர்கள் பொலிஸாருடன் இணைந்து சுற்றிவளைத்தனர்.

3 ஆண்கள் ஒடித்தப்பிய நிலையில் 3 பெண்களை பொலிஸார் கைது செய்தனர். ஒரு தொகுதி இறைச்சியையும் மீட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையில் குறித்த காளை மாட்டின் இறைச்சி சுமார் 20 பேருக்கு விற்பனை செய்யப்பட்டமை தெரியவந்துள்ளது.

சிவகாமி அம்மன் ஆலயத்திற்கு சொந்தமான காணியில் அடாத்தாக குடியேறியிருக்கும் ஒரு கும்பலே இந்தச் செயலை அரங்கேற்றியது என்று ஊர் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (த-20)

# மீண்டும் அம்மாச்சி

மன்னார், ஏப். 22

மன்னாரிலுள்ள அம்மாச்சி உணவகம் சுமார் 30 நாள்களுக்குப் பின்னர் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

மன்னாரில் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் அதனால் ஏற்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளில் சத்தானதாகவும் நோய் எதிர்ப்புச் சக்தி கொண்டதாகவும் காணப்பட்ட உணவுகளை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருந்த அம்மாச்சி உணவகமானது கடந்த மாதம் 20ஆம் திகதி பூட்டப்பட்டது

மீண்டும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதின் பின் மன்னார் மற்றும் முருங்கனில் உள்ள அம்மாச்சி உணவகங்கள் இன்றிலிருந்து தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. உணவகங்களுக்கு வருபவர்கள் சுகாதாரத் துறையினரின் பணிப்புக்கு அமைய முகக் கவசங்கள் அணிந்து சமூக இடைவெளியைப் பின்பற்றி வர வேண்டும் என்றும், ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு நிறைவு செய்யப்படும் ஒரு மணித்தியாளத்துக்கு முன்னரே உணவகம் பூட்டப்பட்டு விடும் என்பதுடன் உணவுகள் அனைத்தும் பொதி செய்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது . (ப-213)



# கொவிட் வைரஸ் சீனா உருவாக்கவில்லை




கொவிட் 19 வைரஸ் ஆய்வகங்களில் உருவாக்கப்படவில்லை. அது வௌவால்களிலிருந்தே உருவாகிறது என்று உலக சுகாதார நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஃபடெலா சாய்ப் நேற்று ஜெனீவாவில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் சீனாவின் ஆய்வகத்தில் இருந்து தப்பியதாக அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அமெரிக்க உளவுத்துறை மற்றும் தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இந்த விடயத்தில் உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாக செயற்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்கா உலக சுகாதார அமைப்புக்கான கொவிட் நிதியையும் தடைசெய்துள்ளது.

இந்த நிலையில், ஃபடெலா சாய்ப் நேற்று தெரிவிக்கையில், கோவிட் 19 தொற்றுநோயை ஏற்படுத்திய வைரஸின் மூலத்தை உறுதியாக தீர்மானிக்க முடியாது. இருப்பினும், கிடைக்கக் கூடிய அனைத்து ஆதாரங்களின்படி, வைரஸ் இயற்கையான விலங்கு மூலத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. இது கையாளப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வைரஸ் அல்ல. வைரஸ் பெரும்பாலும் வௌவால்களுடன் தொடர்புடையது. பல ஆராய்ச்சியாளர்கள் அதன் மரபணு அம்சங்களைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். வைரஸ் ஒரு ஆய்வகத்தில் தயாரிக்கப்படுகிறது என்ற கருத்தை ஆதாரங்கள் ஆதரிக்கவில்லை என்பதை அவர்கள் கண்டறிந்துள்ளனர். மக்கள் சரியான தரவுகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## கடும் நெருக்கடிக்குள் ஈரான்



ஈரானில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பலியானவர்கள் எண்ணிக்கை 5,297 ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து ஈரானின் சுகாதாரத் துறை அமைச்சு தெரிவித்துள்ளதாவது,

ஈரானில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாத் தொற்றினால் 88 பேர் புதிதாக பலியானதைத் தொடர்ந்து, அங்கு கொரோனா தொற்றுக்கு பலி எண்ணிக்கை 5,297 ஆக அதிகரித்துள்ளது. மேலும் ஈரானில் கொரோனா தொற்றினால் 84,802 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும் கொரோனாத் தொற்றைத் தடுக்கும் வகையில் சிறைக் கைதிகள் ஆயிரம் பேரை ஈரான் விடுவித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் முதல் ஈரானில் 1 லட்சம் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாகக் கடும் பாதிப்பை ஈரான் சந்தித்துள்ள நிலையில் அமெரிக்காவின் பொருளாதாரத் தடை காரணமாக ஈரான் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

## வதந்திக்கு பின்னால் அமெரிக்கா

வாஷிங்டன், ஏப்ரல்22

வடகொரிய தலைவர் கிம் ஜொங் உன் கடந்த 12 ஆம் திகதி இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டதாகவும், அதன் பின்னர் அவர் உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. இது குறித்த தகவலை முதலில் அமெரிக்க உளவு நிறுவனம் ஒன்று வெளியிட்டது. அதை தென் கொரிய ஊடகம் ஒன்றும் உறுதி செய்து ஆதரித்தது. ஆனால் தற்போது அந்த தகவலானது அமெரிக்கா கிளப்பி விட்ட புரளியாக இருக்கலாம் என சர்வதேச நிபுணர்கள் குழு சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஏப்ரல் 11 ஆம் திகதி நடைபெற்ற ஆளும் தொழிலாளர் கட்சிக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய கிம் ஜொங், ஏப்ரல் 15 ஆம் திகதி வடகொரியாவின் தந்தை என அழைக்கப்படும் கிம் இல் சங்கின் மாபெரும் பிறந்த நாள் நிகழ்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல் எப்படி 12 ஆம் திகதி இதய அறுவை சிகிச்சைக்கு ஒப்புக்கொள்வார் என நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையில், தென் கொரிய செய்தி நிறுவனம் கிம் ஜாங் உடல் நிலை தொடர்பில் மறுப்புத் தெரிவித்ததை அடுத்து, அமெரிக்க செய்தி நிறுவனமும், கிம் ஜாங்கிற்கு எந்த உடல் பிரச்சினையும் இல்லையென்றால், அவர் விரைவில் மீண்டு வருவார், அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

## கொரோனா பரிசோதனை மாதிரிகளோடு சென்ற வான் மீது சூடு: சாரதி பலி

மியான்மார், ஏப்.22

மியான்மரில் கொரோனா பரிசோதனை மாதிரிகளைக் கொண்டு சென்ற உலக சுகாதார அமைப்பின் வான் மீது விஷமிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வாகனச் சாரதி பலியாகினார். வாகனத்தில் பயணித்த அரச ஊழியர் ஒருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மியான்மாரில் கொரோனா "லாக்டவுன்' நடைமுறைகளினால் பல இடங்களில் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் 'கொரோனா வாரியர்ஸ் 'என்று கருதப்படும் கொரோனா நோயாளிகளுக்காகப் பாடுபடும் தூய்மைப் பணியா ளர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் மீதான தாக்கு தல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதன் பின்னணியிலேயே ராக்கைன் மாகாணத்தில் உள்ள மின்பியா ஊரில் இந்தத் தாக்குதல் நடைபெற்றது.



## கிம்முக்காக பிரார்த்திக்கும் ட்ரம்ப்

வாஷிங்டன், ஏப். 22

வடகொரிய தலைவர் கிம் ஜொங் உன் கடந்த 12 ஆம் திகதி இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டதாகவும், அதன் பின்னர் அவர் உடல் நிலை மோசமடைந்துள்ளதாகவும் வெளியாகிய தகவல்கள் தொடர்பில் மறுப்பு வெளியாகியுள்ளன. இந்த நிலையில் வெள்ளை மாளிகையில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "நான் இதை மட்டுமே சொல்ல முடியும், நான் அவரை நலமடைய வாழ்த்துகிறேன், அவர் நன்றாக இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். அவர் மீது தற்போது வெளிவரும் அறிக்கைகள் உண்மை இல்லை என்று நான் நம்புகிறேன்" எனக் கூறினார்.



## பழங்குடியினரை அண்டாத கொரோனா!

பஸ்தார் பகுதியில் பழங்குடியினர் கொரோனா வைரஸ் தங்கள் கிராமங்களை அண்டாதிருக்க கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தின் பஸ்தார் பகுதியில் வாழும் தொலைதூரப் பழங்குடி கிராமங்களில் வாழும் பழங்குடியினரே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் தடுப்புகளை உருவாக்கி வெளியிலிருந்து வருபவர்களை உள்ளே விடாமல் தடுத்து நிறுத்துகின்றனர். மேலும் பணிக்கு வெளியூருக்குச் செல்பவர்களையும் வெளியிலேயே தனிமைப்படுத்துகின்றனர். பஸ்தார் பழங்குடிப் பகுதியில் 30 லட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் காவல்பணி கடுமையாக உள்ளதால் இவர்களுக்குப் பாராட்டுக் குவிந்து வருகிறது.







# ரசிகர்கள் இல்லாமல் ரென்னிஸ் ஆட்டமா?

## ஹாலெப் எதிர்ப்பு

ரசிகர்கள் இல்லாமல் ரென்னிஸ் போட்டிகளை நடத்துவதற்கு விம்பிள்டன் சம்பியனான ருமேனியாவின் சிமோனா ஹாலெப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

ரசிகர்களின்றி மூடிய மைதானத்தில் டென்னிஸ் விளையாடுவது தொடர்பாக ஸ்பெய்னின் ரபாயேல் நடால், சேர்பியாவின் நொவாக் ஜோகோவிச் ஆகிய இருவரும் அண்மையில் விவாதித்திருந்ததுடன், அதற்கு அவர்கள் ஆதரவும் தெரிவித்திருந்தனர். எனினும், ரசிகர்கள் இல்லாமல் போட்டியை நடத்துவதற்கு சிமோனா ஹாலெப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

ரசிகர்களின்றி ரென்னிஸ் விளையாடுவது சரியாக இருக்காது. மிகப்பெரிய போட்டிகளில் நாங்கள் மிகவும் உற்சாகமாக, ரசித்து விளையாடுகிறோம் என்றால், அதற்கு ரசிகர்கள் அளிக்கும் உத்வேகமும், கரவொலியும் தான் காரணம். இல்லாவிட்டால் ரென்னிஸ் வேறுவிதமான விளையாட்டாகிவிடும்- என்றார்.

இது தொடர்பாக செக்குடியரசு வீராங்கனை பெட்ரா கிவிடோவா கூறுகையில், 'ரசிகர்கள் தான் மிகவும் முக்கியம். இது ஒரு தனிநபர் விளையாட்டு. அதனால் தான் ரசிகர்கள் எங்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்' என்றார். (ஏ)

# சட்டையை கழற்றினேன் ஆனாலும் தப்பித்தேன்!



## யுவராஜ் சிங் தெரிவிப்பு

இங்கிலாந்தில் நடைபெற்ற நெட்வெஸ்ட் கிண்ண சர்வதேச ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற சந்தோசத்தில் அப்போதைய அணித் தலைவராகவிருந்த சௌரவ் கங்குலியைப் போன்று நானும் சட்டையைக் கழற்றினேன். ஆனால் தப்பித்து விட்டேன் என யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதிய நெட்வெஸ்ட் கிண்ண இறுதிப்போட்டியில் இங்கிலாந்து 325 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா திரில் வெற்றியை ஈட்டியது. இந்தியா வெற்றி ஈட்டியதும், வீரர்களுக்கான அரங்கிலிருந்த அணித் தலைவர் சௌரவ் கங்குலி தான் அணிந்திருந்த சட்டையைக் (ஜேர்ஸியை) கழற்றி கையில் வைத்து சுழற்றினார். அதே போல் யுவராஜ் சிங்கும் சட்டையை கழற்றி வெற்றியைக் கொண்டாடினார். சட்டையை கழற்றியதால் கங்குலி விமர்சனத்திற்குள்ளானார். எனினும், நான் அதிலிருந்து தப்பினேன் என்று யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

வெளிநாட்டு தொடர்களில் நாம் இதற்கு முன்னர் 9 அல்லது 10 இறுதிப் போட்டிகளில் தோல்வியடைந்துள்ளோம். வெளிநாட்டு மண்ணில் சாதனைகள் படைத்தது கிடையாது. நாங்கள் அப்போது அணிக்குப் புதியவர்கள். கங்குலி எங்களுக்கு அதிக அளவில் ஆதரவு கொடுத்தார்.

இங்கிலாந்து 325 ஓட்டங்கள் அடித்த பின்னர் நாங்கள் பின்தங்கிய நிலையில் இருந்தோம். இதுபோன்றதொரு இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடுவதென்பது எளிதானது அல்ல. எங்களுக்கு நல்ல ஆரம்பம் கிடைத்தது. ஆனால் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழந்த பின், இங்கிலாந்து வீரர்கள் கிண்ணத்தை வென்று விட்டதாகவே இங்கிலாந்து வீரர்கள் சந்தோசத்தை வெளிப்படுத்தினார்கள் என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

நாங்கள் 146 ஓட்டங்களுக்குள் ஐந்து விக்கெட்டுகளை இழந்திருந்தபோது, ஏறக்குறைய 50 சதவீத ரசிகர்கள் மைதானத்திலிருந்து சென்று விட்டனர். அடுத்து மொஹமட் கைப் என்னுடன் ஜோடி சேர்ந்தார். நாங்கள் இருவரும் ஏற்கனவே 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண அணியில் இணைந்து விளையாடியதால் விக்கெட்டுகளுக்கு இடையில் சிறப்பாக ஓடினோம். பந்தைச் சிறப்பாக அடித்தோம். நான் சற்று அதிரடியாக விளையாடினேன்.

நான் ஆட்டமிழந்த பின்னர் கைப் அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றார். இந்த போட்டியில் விளையாடியது கைப்பின் சிறந்த ஆட்டமாக இருக்கும். நான் கொஞ்சம் யோசித்திருந்தால் என்னால் சதம் அடித்திருக்க முடியும்.

இந்த வெற்றியால், நான் என்னுடைய சட்டையைக் ( ஜேர்ஸியை)கழற்றி சந்தோசத்தை வெளிப்படுத்தினேன்.

இங்கிலாந்தில் குளிர் அதிகமாக இருக்குமென்பதால் நான் உள்ளே டிசர்ட் அணிந்திருந்தேன். இதனால் என்னை யாரும் கவனிக்கவில்லை. நான் அணிந்திருந்த வெள்ளை நிற டிசர்ட் என்னைக் காப்பாற்றியது - என்றார். (ஏ)

# துடுப்பு மட்டையை ஏலம் விடும் அல் ஹசன்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான ஷாகிப் அல் ஹசன் கொரோனா வைரஸ் தடுப்புக்கு நிதி திரட்ட துடுப்பு மட்டையை ஏலம் விட இருக்கிறார். இவர் கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலக கோப்பையில் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்தத் தொடரில் இரண்டு சதம், ஐந்து அரைச்சதங்களுடன் 606 ஓட்டங்கள் விளாசினார். அத்துடன் 11 விக்கெட்டுகள் கைப்பற்றினார். உலகக் கோப்பைத் தொடரில் 600 ரன்களுக்கு மேல் ரன்குவித்தும், 10க்கு மேற்பட்ட விக்கெட்டுகளும் வீழ்த்திய ஒரே நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் உலகமே ஸ்தம்பித்துள்ளது. ஏழை மக்கள் உணவின்றி பரிதவித்து வரும் நிலையில், அரசுகள் பணமின்றி தள்ளாடும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பிரபலங்கள், வீரர்கள், தொழிலதிபர்கள் தங்களால் இயன்ற நிதி உதவியைச் செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் நிதி திரட்டுவதற்காக உலகக் கோப்பையில் பயன்படுத்திய பேட்டை ஏலம் விட ஷாகிப் அல் ஹசன் முடிவு செய்துள்ளார். உலக கோப்பை முழுவதும் ஒரே பேட்டை பயன்படுத்தினேன் என்று ஷாகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

# லசித் மலிங்கவின் பந்து வீச்சு சிறப்பு

## கெவின் புகழாரம்

ஐ.பி.எல். தொடரின் தலைசிறந்த பந்து வீச்சாளர் லசித் மலிங்க என இங்கிலாந்து அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார். கொரோனா அச்சுறுத்தலால் நடப்பாண்டுக்கான ஐ.பி.எல். தொடர் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால் முன்னாள் வீரர்கள், வர்ணனையாளர்கள் சிறந்த நிகழ்வுகள் தொடர்பாகப் பேசிவருகிறார்கள்.

'ஸ்டார் போர்ட்ஸ்' முன்னாள் வீரர்கள், வல்லுநர்களை கொண்டு நடத்திய கருத்துக் கணிப்பில் மகேந்திரசிங் டோனி, ரோகித் சர்மா ஆகியோர் சிறந்த ஐ.பி.எல். அணித்தலைவர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இந்நிலையில் ஐ.பி.எல். போட்டிகளின் எல்லாக் காலக்கட்டத்திலும் சிறந்த பந்து வீச்சாளர் மலிங்க தான் என்று கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

என்னைப் பொறுத்த வரைக்கும் மலிங்க தான் சிறந்த பந்து வீச்சாளர். அவர் விளையாடிய போட்டிகளையும் தொடர்ச்சியாக யோர்க்கர் பந்துகளை வீசியதையும் ஒவ்வொருவரும் கவனித்திருக்கலாம்.

நான் நரைனைத் தான் (மேற்கிந்திய தீவுகள்) தேர்வு செய்திருக்க வேண்டும். ஆனால், சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் தான் அவரால் விக்கெட் வீழ்த்த முடிந்தது. மேலும், அவரது பந்து வீச்சு குறித்து விமர்சனமும் எழுந்தது. அதனால் நரைன் பெயரை சொல்ல தயங்கினேன். மலிங்கவை தேர்வு செய்தேன் - என்றார். ஐ.பி.எல். தொடர் ஆரம்பித்த காலம் முதல் தற்போது வரை விளையாடி வரும் நட்சத்திர வீரர்களில் மலிங்க முன்னிலை வகிப்பதுடன், அந்த தொடரில் தொடர்ச்சியாக விளையாடும் இலங்கை வீரர் மலிங்க மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 22.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.